# கேரளப் பாடநூல்

# தமிழ்

## வகுப்பு IX

## ஆசிரியர் பனுவல்

**Tamil**
**Standard IX (AT)**
**Teacher Text**

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
**2024**

# 1 ஒரே ஒரு பூமி

**அலகு அறிமுகம்**

"உலகனைத்திற்கும் ஒருதாய் புவிமடியாம்" என்பதுபோல வாழும் உயிர்கள் அனைத்திற்கும் தாயாக இருப்பது பூமிதான். இயற்கை வளங்களால் சூழப்பட்ட இப்பூமி இறைவன் நமக்குக் கொடுத்த மிகப்பெரிய பொக்கிஷமாகும். நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்கள் அடங்கியதே இயற்கை. நமது முன்னோர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர். ஆரோக்கியமான வாழ்வைப் பெற்றனர். இயற்கை வளங்களைச் சூழ்ந்துதான் மனிதன் படைக்கப்பட்டுள்ளான். அவற்றைப் பாதுகாப்பதும் மேம்படுத்துவதும் மனிதனின் கடமையாகும். உயிர்கள் வாழ்வதற்குத் தேவையான உணவு, உடை, நீர் அனைத்திற்கும் ஊற்றுக்கண்ணாக விளங்குவது இப்பூமியே. எண்ணிலடங்கா வளங்களைக்கொண்ட இயற்கை, இன்று உலகமயமாக்கல், நவீனமயமாக்கல், தொழில்நுட்ப வளர்ச்சி எனப் பல்வேறு காரணிகளால் சீர்குலைந்து வருகிறது.

எதிர்காலத் தலைமுறையின் வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பது இன்றைய சமூகத்தின் கடமையாகும். 'இயற்கை இல்லையேல் இனிதான வாழ்வு இல்லை' எனும் அரிய கருத்தை அனைவரும் உணர்ந்து செயல்படவேண்டிய நேரமிது. தனிமனிதனின் பொருளாதார வளர்ச்சிக்காக இயற்கையைச் சிதைத்தல் தவிர்க்கப்படவேண்டும். இயற்கையை நாம் பாதுகாத்தால் இயற்கை நம்மைப் பாதுகாக்கும்.

இவ்வலகில் இயற்கை, விடியலைத்தேடி, உயிர்த்துளி எனும் மூன்று கருத்தலகுகள் இடம்பெற்றுள்ளன. முதல் கருத்தலகில் இடம்பெறும் காடு, இலக்கியத்தில் இயற்கை, சிலப்பதிகாரம் ஆகிய பாடப்பகுதிகள் இயற்கையின் வளமையைச் சுட்டுகின்றன.

இரண்டாவது கருத்தலகில் இடம்பெறும் மரங்கள், சில்லுமரத்துப்பட்டி, நீர்ப்பாசனவசதி ஆகிய பாடப்பகுதிகள் கிராம வாழ்க்கையையும் பாசன முறைகளையும் மையப்படுத்தியுள்ளன.

'உயிர்த்துளி' என்னும் மூன்றாவது கருத்தலகில் நதிகள் இணைப்பில் வளமான இந்தியா, குடிக்கும் நீரைப் பாழாக்கக்கூடாது, மழைநீர் சேகரிப்பு ஆகிய பாடப்பகுதிகள் இடம்பெற்றுள்ளன. இக்கருத்தலகு தண்ணீரைப் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் நோக்கில் அமைந்துள்ளது.

இந்த அலகைக் கற்பிக்கத் தேவையான காலம்
24 பிரிவேளைகள்

| கரு | துணைக்கரு | இலக்கிய வடிவங்கள் | கற்றல் நோக்குகள் | | | மொழிக் கூறுகள் | மொழி வெளியீட்டு வடிவங்கள் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கருத்துகள் | திறன்கள் | மனப் பான்மைகள் | | | |
| சுற்றுச்சூழல் (ஒரே ஒரு பூமி) | • இயற்கை வளம்<br>• இயற்கைச் சுரண்டல்<br>• நீர் மேலாண்மை | • வருணனைக் கட்டுரை<br>• மரபுக் கவிதை<br>• புதுக் கவிதை<br>• சிறுகதை<br>• விளக்கக் குறிப்பு<br>• கட்டுரை | உயிரினங்களின் வாழ்விடமாக இயற்கை விளங்குகிறது.<br><br>இயற்கை வளங்களான நிலம், நீர், காற்று ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டும்.<br><br>சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது மிக இன்றியமையா ததாகும்.<br><br>இயற்கை சுரண்டப் படுவதால் சுற்றுச்சூழல் மாசடை கின்றது. | • வாசிக்கும் திறன்<br>• கட்டுரை எழுதும் திறன்<br>• சொற்பொழிவு ஆற்றும் திறன்<br>• பத்திரிகைச் செய்திகள் தலையங்கம் எழுதும் திறன் | இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகுதல்.<br><br>சுற்றுச்சூழல் மாசடைவதைத் தடுக்க/தவிர்க்க வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்குதல். | அடுக்குத்தொடர்<br><br>இரட்டைக்கிளவி<br><br>தூயத் தமிழ்நடை<br><br>வாக்கிய அமைப்பு<br><br>தற்குறிப்பேற்ற அணி | நயம் பாராட்டுதல்<br><br>பத்திரிகைச் செய்தி<br><br>தலையங்கம்<br><br>சொற்பொழிவு<br><br>பட்டிமன்றக் குறிப்பு<br><br>கட்டுரை<br><br>உறுதிமொழி<br><br>விமர்சனம்<br><br>ஒப்பீட்டுக் குறிப்பு | மதிப்பீட்டுக் குறிப்புகளின் அடிப்படையில் மொழி வடிவங்களை மதிப்பீடு செய்தல். |

## கற்றல் இலக்குகள்

- இயற்கை அழகை உணர்ந்து குறிப்பு எழுதுகிறார்கள்.
- பல்சுவைப் பாடல்களின் வழி இயற்கைச் செல்வங்கள் குறித்துக் கலந்துரையாடி வகைப்படுத்திப் பட்டியலிடுகிறார்கள்.
- நகரமயமாக்கலின் விளைவாகச் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகின்றது என்பதை உணர்ந்து சொற்பொழிவு ஆற்றுகிறார்கள்.
- நதிகள் நாகரீகத்தின் தொட்டில்கள் என்னும் கருத்தின் அடிப்படையில் நீர் மேலாண்மை குறித்துக் கட்டுரை எழுதுகிறார்கள்.
- பண்டைய கால இயற்கைச் சூழலைத் தற்கால இயற்கைச் சூழலோடு ஒப்பீடு செய்து குறிப்பு எழுதுகிறார்கள்.
- இயற்கைச் செல்வங்களைப் பாதுகாக்கும் வகையில் பல்வேறு செயல்களில் ஈடுபடுகிறார்கள்.

## கற்றல் கருவிகள்

- பாடநூல்
- ஆசிரியர் பனுவல்
- கரும்பலகை
- காணொளிக் காட்சிகள்
- சார்ட்
- செய்தித்தாள் துணுக்குகள்
- நூலகம்.

## நுழைவுச் செயல்பாடு

- ஆசிரியர் மாணவர்களிடம் தங்களுக்குப் பிடித்தமான மழைக்காட்சிகள் பற்றிக் கூறும் திரையிசைப் பாடல்களைப் பாடக்கூறுதல்
- காணொளியில் இயற்கை பற்றிய பாடல் ஒன்றைக் காண்பித்தல்.

  "மூங்கில் காடுகளே
  வண்டு முனகும் பாடல்களே
  தூரச் சிகரங்களில்
  தண்ணீர் துவைக்கும் அருவிகளே
  வேரை அறுத்தாலும்
  மரங்கள் வெறுப்பை உமிழ்வதில்லை"

- மாணவர்களிடம் தாங்கள் வாழும் இயற்கைப் பகுதிகளின் சிறப்புகளைக் கூறச்செய்தல்.

மாணவர்கள் மலை, காடு, விவசாய நிலம், ஆறு, குளம் பூங்காக்கள் இவற்றின் அழகானக் காட்சிகளைக் கூறுதல். ஆசிரியர் ICT வழி பல்வேறு இயற்கைக் காட்சிகளைக் காண்பித்தல். பாடல்வரிகள், மேற்கோள்கள் இவற்றையும் காண்பித்து, சிறு கலந்துரையாடல் நடத்துதல் மாணவர்கள் கூறிய கருத்துகளை ஆசிரியர் மேன்மைப்படுத்தி கரும் பலகையில் அல்லது தட்டச்சு செய்து திரையில் காண்பித்தல். இயற்கை அன்றைய காலத்தில் பாதுகாக்கப்பட்டது. இன்றைய இயற்கை பல்வேறு சுரண்டலுக்கு உள்ளாகி வருகிறது. இதனைத்தடுத்து நிறுத்தி இப்புவியைப் பாதுகாக்கும் மனநிலையை மாணவர்கள் பெறவேண்டும் எனக்கூறி பாடப்பகுதிக்குள் அழைத்துச் செல்லுதல்.

## பாடப்பகுதிகள்

### இயற்கை

- காடு
- தேவாரம், புறநானூறு, சீவகசிந்தாமணி
- சிலப்பதிகாரம்

### விடியலைத் தேடி

- மரங்கள்
- சில்லுமரத்துப்பட்டி
- நீர்ப்பாசனவசதி

### உயிர்த்துளி

- நதிகள் இணைப்பில் வளமான இந்தியா
- குடிக்கும் நீரைப் பாழாக்கக்கூடாது
- மழைநீர் சேகரிப்பு

## செயல்பாடு 1

**உலக வன நாளன்று காடுகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி உறுதிமொழி தயார் செய்தல்.**

- → காடு என்ற பாடப்பகுதியை வாசிக்கச் செய்தல், கலந்துரையாடல் நடத்துதல்.
- → பாடப்பகுதியின் மையக்கருத்தைக் குறிப்பாக எழுதச்சொல்லுதல், வெளியிடுதல்.
- → காடுகளின் தற்போதைய நிலையைக் குறித்து ஆசிரியர் சில வினாக்களை வினவுதல், கலந்துரையாடல் நடத்துதல்.
- → காடுகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தை மாணவர்களின் மனதில் உருவாக்குதல்.
- → அதனடிப்படையில் உறுதிமொழி தயாரிக்கக்கூறுதல்

ஆசிரியர் உறுதிமொழியின் மாதிரியை மாணவர்களுக்கு வழங்குதல். மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, காடுகளின் முக்கியத்துவம் பற்றிய உறுதிமொழியைக் குறிப்பேட்டில் பதிவு செய்தல் உறுதிமொழியில் தெளிவான கருத்துகள் இடம்பெற்றுள்ளனவா என்பதை ஆசிரியர் உறுதி செய்ய வேண்டும்.

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- ➢ தன்வினை வாக்கியங்களாக எழுதுதல்
- ➢ சுருக்கமாவும் தெளிவாகவும் எழுதுதல்
- ➢ சூழல், நிகழ்வு போன்றவைகளுக்கு ஏற்ப உறுதிமொழி தயாரித்தல்
- ➢ உறுதிமொழிகளை எழுதி வாசித்தல்

## செயல்பாடு 2

**விமர்சனக் குறிப்பு எழுதுதல்**

ஒரு படைப்பின் நிறை குறைகளை அல்லது ஒரு செயலின் நன்மை தீமைகளை மதிப்பீடு செய்து விமர்சகனின் கருத்துகளையும் கூறுவதே விமர்சனம் எனப்படும்.

- → ஆசிரியர் விமர்சனம் குறித்துப் பொதுவான கருத்துகளை ICT வழியாகக் காண்பித்தல்.
- → நமது பாடப்பகுதியில் "குட்டியைக் கவ்வும்போது .... சக்தி கொண்டு விளங்குகிறது". இவ்வரிகள் கூறும் பொருளைக் குறித்து விவாதித்தல்.
- → இவ்வரிகளின் கருத்தையும் சமூகத் தொடர்பையும் கலந்துரையாடிப் பகுப்பாய்ந்து விமர்சனம் எழுதச் செய்தல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- ➢ மையக் கருத்தைச் சமகாலச் சூழலுடன் ஒப்பிட்டுக் கூறுதல்.
- ➢ கருத்து இக்காலத்திற்குப் பொருந்துமாறு உள்ளதா என மதிப்பிடுதல்.
- ➢ மொழிநடை.

# தேவாரம்

## நுழைவுச் செயல்பாடு

- ஆசிரியர் ICT பயன்படுத்தி அழகான காடுகளையும் இயற்கைக் காட்சிகளையும் காண்பித்தல் (திரைப்படப் பாடல்கள், கவிதை வரிகள், வருணனைத் தொடர்கள்)
- சிறு சிறு வினாக்கள் மூலம் காட்சிகளில் பார்த்த செய்திகளை வெளிக்கொணர்தல்.
    - ⇨ காடுகள் எப்படி இருந்தன?
    - ⇨ என்னென்ன மரங்களைப் பார்த்தீர்கள்?
    - ⇨ இயற்கை பசுமையாகக் காட்சியளித்ததா?
- கலந்துரையாடல் நடத்துதல். இயற்கை வளமாக இருந்ததை உணர்ந்து கொள்ளுதல்.

## செயல்பாடு 3

**குறிப்பு எழுதுதல்.**

- → தேவாரப்பாடல் கூறும் இயற்கை வளங்களைப் பட்டியலிடச் செய்தல்.
- → ஆசிரியர் கலந்துரையாடி மேன்மைப்படுத்துதல்
- → மாணவர்கள் பாடல் கருத்துகளைக் குறிப்பாக எழுதி வகுப்பில் வெளியிடுதல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- ➢ வடிவம்
- ➢ மொழிநடை
- ➢ கருத்துத்தெளிவு

## செயல்பாடு 4

**ஒப்பீட்டுக் குறிப்பு எழுதுதல்**

- → தேவாரம், புறநானூறு, சீவகசிந்தாமணி ஆகிய பாடங்களில் இலக்கியங்கள்

வெளிப்படுத்தும் இயற்கை வளங்களை வகைப்படுத்தி எழுதுதல். வகுப்பில் வெளியிடுதல்.

→ இன்றைய இயற்கைக் காட்சிகளை ICT வழியும் கலந்துரையாடல் வழியும் அறிந்து கொள்ளுதல்.

→ அதனடிப்படையில் ஒப்பீட்டுக் குறிப்பு தயார் செய்தல்.

| அன்றைய இயற்கை | இன்றைய இயற்கை |
|---|---|
| ⅄ இயற்கை வளமாக இருந்தது. | ⅄ காடுகள், மரங்கள் அழிக்கப்படுகின்றன. |
| ⅄ காடுகள், செழிப்பாகக் காட்சி அளித்தன. | ⅄ இயற்கை சுரண்டப்படுகிறது. |
| ⅄ செடிகொடிகள், பூக்கள், விலங்குகள், பறவைகள் போன்றவைகள் மகிழ்ச்சியாக இருந்தன. | ⅄ வறட்சி, காலநிலை மாற்றங்கள் ஏற்படுகின்றன. |
| ⅄ இயற்கை பாதுகாக்கப்பட்டது. | ⅄ பசுமைக் குறைவு, இயற்கை மாசுபாடு அதிகரித்துள்ளன. |

## செயல்பாடு 5

**துண்டுப்பிரசுரம் தயார் செய்தல்**

- காடுகள் அழிக்கப்படுகின்றன. அதனால், வனவிலங்குகள், பறவைகள் வாழ்விடமின்றி தவிக்கின்றன என்பதை மாணவர்கள் புரிந்து கொள்ளும் படிச் செய்தல்.
- காடுகள் பாதுகாக்கப்பட வேண்டியவை எனும் விழிப்புணர்வை மாணவர்கள் அடைதல். மலை, காடுகளைப் பாதுகாக்கும் நோக்கில் துண்டுப்பிரசுரம் தயார்செய்து வெளியிடச் செய்தல்.

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

➢ வடிவம்

➢ மொழிநடை

➢ கருத்துத் தெளிவு

➢ விழிப்புணர்வு சொற்றொடர்கள்

# சிலப்பதிகாரம்

## செயல்பாடு 6

### ஒப்பீட்டுக் குறிப்பு எழுதுதல்

- → சிலப்பதிகாரம் பாடப்பகுதியைத் தனி மற்றும் குழு வாசிப்பிற்கு உட்படுத்துதல்.
- → ஆசிரியர் சீர் பிரித்து வாசித்துக் காண்பித்தல்.
- → பாடலின் பொருளை ஆசிரியர் உதவியுடன் எழுதச் சொல்லுதல். மாணவர்கள் வரிசைப்பட எழுதியதை ஆசிரியர் சரிபார்த்தல்.
- → சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள பேரியாற்றின் அழகைத் தற்கால ஆற்றின் அழகோடு ஒப்பிட்டு எழுதுதல்.

| பேரியாறு | தற்கால ஆறுகள் |
|---|---|
| • நீர்வளம் நிறைந்த அழகிய ஆறு<br>• ஆற்றின் அருகில் மரங்கள் நிறைந்து காணப்பட்டன.<br>• கரைப்பகுதியில் அருவிகள் உள்ளன.<br>• கோங்கம், வேங்கை, கொன்றை, நாகம், திலகம் போன்ற பூக்கள் நிறைந்துள்ளன.<br>• பரந்த மணற்பரப்பு உள்ளது | • நீர்வளம் குறைவு<br>• ஆற்றில் குப்பைகள்/ சாக்கடைகள் தேங்கியுள்ளன.<br>• ஆற்றில் கரைப்பகுதி காய்ந்துகிடக்கிறது, அருகே வீடுகள் உள்ளன.<br>• செடிகொடிகள் குறைவு<br>• ஆற்றில் மணல்/ஊற்றுகள் இல்லை. |

# மரங்கள்

## நுழைவுச் செயல்பாடு

- → ஆசிரியர் மரங்கள் பற்றிய ஒரு குறும்படத்தைக் காணொளி மூலம் மாணவர்களுக்குக் காண்பித்தல்.
- → மரங்கள் இல்லாத உலகத்தை நாம் கற்பனை செய்து பார்க்க முடியுமா?
- → இன்றைய காலகட்டத்தில் மரங்களின் நிலை எவ்வாறு உள்ளது?
- → மரங்கள் நடுவதன் முக்கியத்துவத்தைக் கூறுங்கள்?
- → இதுபோன்ற பல்வேறு வினாக்களை ஆசிரியர் மாணவர்களிடம் கேட்டறிதல், விவாதம் செய்தல்.

## செயல்பாடு 7

**சிறு குறிப்பு எழுதுதல்**

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து இன்றைய சூழலில் மரங்களை அழிப்பதால் வரும் தீமைகளையும் மரங்கள் நமக்குத் தருகின்ற நன்மைகளையும் விவாதித்து இரண்டு குழுக்களையும் முறையே நன்மை தீமைகளை வரிசைப்படுத்தச் செய்தல்.
- வரிசைப்படுத்திய கருத்துகளை விவாதம் செய்தல்.
- மாணவர்கள் குழுக்களாக எழுதிய கருத்துகளை ஆசிரியர் மேன்மைப்படுத்துதல்.
- மரங்கள் கவிதையின் சிறப்பு அம்சங்களும் கருத்துகளும் இடம்பெற்றுள்ளனவா என்பதை உறுதிப்படுத்தி குறிப்பேட்டில் எழுதச் செய்தல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- கருத்து
- மொழிநடை
- சுருங்கச் சொல்லுதல்

## சில்லுமரத்துப்பட்டி

## செயல்பாடு 8

- கிராமத்து வாழ்க்கைக்கும் நகர வாழ்க்கைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
- நகர வாழ்க்கையை விட கிராம வாழ்க்கையை ஏன் விரும்புகிறீர்கள்?
- கிராமத்து வாழ்க்கையின் எந்த பழக்கவழக்கங்கள் உங்களுக்கு மிகவும் பிடிக்கும்?
- கிராமங்களில் இன்று தொலைந்து போன பழக்கவழக்கங்கள் எவை?
- இதுபோன்ற பல்வேறு வினாக்களை ஆசிரியர் மாணவர்களிடம் கேட்டறிதல்.
- கிராமத்து வாழ்க்கையின் தனித்தன்மைகளைத் தொகுத்து ஆசிரியர் கூறுதல்.

இயற்கையான காற்று, புகை, மாசு இல்லாத சூழ்நிலை, நீர் ஆதாரங்களான கிணறு, குளம், ஏரி, குட்டை இவைகள் காணப்படும். கிராமத்தில் அனைத்து இடங்களிலும் பயன்தரும் மரங்கள் காணப்படுகின்றன.

ஆசிரியர் தொகுத்துக் கூறிய செய்திகளை மாணவர்கள் பதிவேட்டில் குறிப்பிடச் செய்தல்.

## செயல்பாடு 8

**தூயத் தமிழ்நடையில் எழுதவும்**

- பாடப்பகுதியைத் தனிவாசிப்பு மற்றும் குழு வாசிப்புக்கு உட்படுத்துதல்.
- பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள வட்டாரச் சொற்களைக் கண்டறியச் செய்தல்.

வட்டார வழக்குச் சொற்களைத் தூயத் தமிழ் நடையில் எழுதுதல்.

| | | |
|---|---|---|
| போகணும்னு | – | போகவேண்டும் என்று |
| ஆசைப்படுகிறோம் | – | விரும்புகிறோம் |
| எவ்ளோ | – | எவ்வளவு |
| எப்பவாவது | – | எப்பொழுதாவது |
| இருக்குற | – | இருக்கின்ற |
| செய்யறது | – | செய்வது |

கண்டறிந்த சொற்களை மாணவர்கள் குறிப்பேட்டில் எழுதச் செய்தல்.

மாணவர்களிடம் தங்களது வட்டாரத்தில் பேசப்படும் வழக்குச் சொற்களை எழுதி வரச் செய்தல். குழுக்களின் அடிப்படையில் மாணவர்களைப் பிரித்து வட்டார வழக்குச் சொல்லகராதி உருவாக்கச் செய்யலாம்.

## செயல்பாடு 9

**சொற்பொழிவுக் குறிப்பு தயார் செய்தல்**

ஆசிரியர் சொற்பொழிவு பற்றி சில பொதுவான கருத்துகளை வழங்குதல்.

**சொற்பொழிவின் கூறுகள்**

- ❒ பேசவிருக்கும் பொருள் பற்றிய கருத்துக்களைத் தொகுத்தல்.
- ❒ குறிப்புகளை வரிசைப்படுத்துதல்.
- ❒ பொருத்தமாக வரிசைப்படுத்துதல்.
- ❒ மேடையேறுவதற்கு முன் குறிப்புகளைப் பார்த்தல், கவனத்தைச் சிதறவிடாமலிருத்தல்.
- ❒ பேசப்போகும் தலைப்பைக் கூறுதல்.
- ❒ கவனத்தை ஈர்த்து முகமன் கூறல்.

- ❒ கருத்துக்கேற்ப குரல் ஏற்றத்தாழ்வுடன் பேசுதல்.
- ❒ பொருத்தமான மெய்ப்பாடுகளை வெளிப்படுத்துதல்.
- ❒ மேற்கோள்கோள், சான்றுகள் கூறும்போது குரலில் அழுத்தம் கொடுத்தல்.
- ❒ எடுத்துக்கொண்ட பொருளை நிறுவுதல்.
  - → இவ்வலகிலிருந்து புரிந்துகொண்ட கருத்துகளின் அடிப்படையில் சொற்பொழிவிற்குத் தேவையான மேற்கோள்கள் மற்றும் தரவுகளை நூலகத்திலிருந்து திரட்டச் சொல்லுதல்.

"விவசாயி சேற்றில் கால் வைத்தால்தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும்" என்னும் கருத்தை உள்வாங்கி குறிப்பு தயாரிக்க ஆசிரியர் உதவுதல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- ➢ கருத்துத் தெளிவு
- ➢ மொழி நடை
- ➢ உச்சரிப்பு
- ➢ மேற்கோள் பயன்பாடு
- ➢ சுருங்கக் கூறுதல்

## செயல்பாடு 10

**கதை விமர்சனம் எழுதுதல்**

- → மாணவர்களுக்குக் காணொளி மூலம் திரைப்பட விமர்சனம் ஒன்றைக் காண்பிக்கலாம்.
- → இதன் தொடர்ச்சியாக மாணவர்கள் 'சில்லுமரத்துப்பட்டி' பாடப்பகுதியை வாசித்துக் கருத்துகளைக் கூறச் செய்தல்.
- → மையக்கருத்து, கதாபாத்திரங்கள், மொழிநடை ஆகியவற்றைப்பற்றிக் கலந்துரையாடுதல்.
- → கலந்துரையாடிய கருத்துகளைக் குறிப்பாக எழுதுதல்.
- → குறிப்புகளை முறையாகத் தொகுத்தல்.
- → சமகாலப் பிரச்சினைகளுடன் ஒப்பிட்டு விமர்சனம் செய்யும் திறனைப்பெற ஆசிரியர் உதவுதல்.
- → இதன் அடிப்படையில் கதையை விமர்சனம் செய்து, வெளியிட்டு, மேன்மைப்படுத்துதல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- ➢ வடிவம்
- ➢ நோக்கம்
- ➢ பகுப்பாய்வு
- ➢ மொழிநடை
- ➢ நம்பகத்தன்மை
- ➢ சமநிலையுடன் சீர்தூக்கும் தன்மை

# நீர்ப்பாசன வசதி

## நுழைவுச் செயல்பாடு

- ஆசிரியர், முன்னோர் செய்த நீர் மேலாண்மையைக் காட்டும் படங்களை விளக்கப்படத்தில் ஒட்டிக் காண்பித்தல்.

  (கிணறு, ஏரி, ஆறு, அணைக்கட்டுகள்)

- இன்றைய பாசனமுறைகளை மாணவரிடம் கேட்டறிதல். மாணவர்கள் தங்கள் பகுதியில் உள்ள நீர்ப்பாசன வசதிகளைக் கூறுதல்.

  (நிலத்தடிநீர், குடிநீர்க்குழாய், ஜப்பான் குடிநீர்த் திட்டம்.....)

- கலந்துரையாடல் நடத்துதல்
- பண்டையகால நீர்ப் பாசன முறைகளின் சிறப்புகளை அறிந்து கொள்ளுதல்
- இதன்மூலம் பாடப்பகுதிக்குள் நுழைதல்

## செயல்பாடு 11

**துண்டுப் பிரசுரம் தயார் செய்தல்.**

- → 'நீர்ப்பாசன வசதி' கதையை மாணவர்கள் வாசித்தல். ஆசிரியர் வாசித்துக் காட்டுதல்.
- → மையக்கருத்தை எழுதி வகுப்பில் வெளியிடச் செய்தல்.
- → பின்தங்கிய மாணவர்களுக்கு ஆசிரியர் உதவுதல்.
- → புறநானூற்றுப் பாடல் கருத்தை விளக்கிக் கூறுதல்.
- → நீர்நிலைகளின் அதிகரிப்பு நாட்டு வளத்திற்குத் தேவை எனும் கருத்தின் அடிப்படையில் துண்டுப் பிரசுரம் தயாரித்து வகுப்பில் வெளியிடுதல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- வடிவம்
- கருத்து
- சுருங்கச் சொல்லுதல்
- விழிப்புணர்வுச் செய்தி

## செயல்பாடு 12

**விளக்கக் குறிப்பு எழுதுதல்**

- இந்தியாவில் ஓடுகின்ற பல்வேறு நதிகளைக் கணினியின் உதவியுடன் காண்பித்தல்.
- நதிகளின் படங்களை வண்ண அட்டையில் ஒட்டி வகுப்பறையில் காண்பித்தல்.
- இதனடிப்படையில் ஆறுகளின் பிறப்பிடம், பயன்கள், ஆறுகள் தற்பொழுது மாசடைவதற்கான காரணங்களைக் கலந்துரையாடச் செய்தல்.

ஓரிரு வினாக்களை வினவுவதன் மூலம் தான் இரசித்ததை, அறிந்த கருத்துகளைக் கொண்டு ஆறுகளின் அழகு, பிறப்பிடம், பண்புகள், தற்பொழுது மாசடைவதற்கான காரணங்களைப் பற்றி கலந்துரையாடிக் கூறப்பட்ட கருத்துகளைக் குறிப்பாக எழுதச் செய்தல்.

### குடிக்கும் நீரைப் பாழாக்கக் கூடாது

## நுழைவுச் செயல்பாடு

- ஆசிரியர் மாணவர்களிடம் நீர் பற்றிய பொன்மொழிகள்/பழமொழிகளைக் கூறச்செய்தல்.
- பொன்மொழிகள் மாணவர்கள் கூறியவற்றைக் கரும்பலகையில் எழுதுதல்.

  'மழைநீர் பூமியின் ஆன்மா...'

  'இன்றே நீர்வளத்தைக் காப்போம்...!'

  'மரம் வளர்ப்போம்...மழைநீரைப் பெறுவோம்...!'

  'நீரின்றி அமையாது உலகு'

போன்ற பொன்மொழிகள்/பழமொழிகள் உணர்த்தும் கருத்துகளைக் கலந்துரையாடச் செய்தல்.

மாணவர்கள் கூறும் கருத்துகளை ஆசிரியர் தொகுத்துக் கூறி, நீர் இல்லாமல் இவ்வுலகு இல்லை எனும் முடிவுக்கு வருதல். அதனடிப்படையில் பாடப்பகுதிக்குள் நுழைதல்.

## செயல்பாடு 13

**புகார்க் கடிதம் எழுதுதல்**

→ ஆசிரியர் மாணவர்களிடம் அவர்கள் வாழும் பகுதியில் உள்ள நீர்நிலைகளைப் பற்றி வினவுதல்.

- குடிநீர் வசதி உண்டா?
- ஆறு, ஏரி, குளம் இருக்கின்றனவா?

→ மாணவர்கள் கூறிய கருத்துகளைக் கரும்பலகையில் எழுதுதல்.

- குடிநீர்க் குழாய் வழி கிடைக்கிறது.
- கிணற்று நீர் பயன்படுத்தப்படுகிறது. ஆனாலும், தண்ணீர் மாசடைந்து இருக்கிறது.
- ஏரி/குளம் மாசடைந்து கிடக்கிறது.

→ போன்ற கருத்துகளை மையமாகக் கொண்டு புகார்க் கடிதம் தயார் செய்யச் செய்தல்.

→ புகார்க் கடிதத்தில் இடம்பெற வேண்டிய படிநிலைகளை ஆசிரியர் விளக்குதல்

→ பின்தங்கிய மாணவர்களையும் எழுதச் செய்தல்.

→ ஊராட்சி மன்றத் தலைவருக்குப் புகார்க் கடிதம் எழுதுதல்.

→ மாணவர்கள் எழுதிய கடிதத்தை வெளியிட்டு மேன்மைப்படுத்துதல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

➢ வடிவம்

➢ கருத்து

➢ சுருங்கச் சொல்லுதல்

➢ உள்ளடக்கம்

## செயல்பாடு 14

**தலையங்கம் தயார் செய்தல்**

→ ஆசிரியர் இதழ்களில் இடம்பெற்ற தலையங்க மாதிரிப் படிவங்களை மாணவர்களுக்கு வழங்குதல்.

→ மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தல்.

→ குறிப்பிட்ட ஒரு தலைப்பைக் குழுக்களுக்கு வழங்குதல்.

→ தலைப்பிற்குப் பொருத்தமான கருத்துகளைப் பாடநூல், நூலகம் வாயிலாகத் திரட்டச் சொல்லுதல்.

→ தலையங்கத்தில் இடம்பெறவேண்டிய செய்திகளைக் கொடுத்து கலந்துரையாடச் செய்தல்.

- தலைப்பு
- பிரச்சினை
- காரணங்கள்
- தீர்வு

→ மாணவர்கள் கலந்துரையாடி எழுதிய கருத்துகளைக் குறிப்பேட்டில் எழுதச் செய்தல்.

→ பகுப்பாய்வு செய்தல்

→ தலையங்கத் தலைப்பைத் தேர்வு செய்தல்.

→ பிரச்சினைகளைக் கண்டறிதல்.

→ காரண காரியங்களை அலசி ஆராய்தல்.

→ பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் கண்டறிதல்.

→ ஆசிரியர் அனைத்து மாணவர்களின் பங்களிப்பை உறுதி செய்தல்.

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

➢ பொருத்தமான தலைப்பு

➢ வடிவம்

➢ மொழிநடை

➢ காரணகாரியத் தொடர்பு

➢ பிரச்சினைக்கானத் தீர்வு

## செயல்பாடு 15

**கட்டுரை எழுதுதல்**

→ ஆசிரியர் மாணவர்களை நூலகத்திற்கு அழைத்துச் சென்று, நீர் தொடர்பான பல்வேறு கட்டுரைகளைக் கொடுத்தல்,

→ கட்டுரையில் இடம்பெற வேண்டிய செய்திகளைப் பற்றிய முன்னறிவை ஆசிரியர் மாணவர்களுக்கு வழங்குதல்.

- → பாடப்பகுதிகள் வழி அறிந்து கொண்ட கருத்துகளை மையமாகக் கொண்ட செய்திகளைத் திரட்டச் செய்தல்.
- → அனைத்துத் தகவல்களுடையவும் அடிப்படையில் கருத்துகளைச் செம்மைப்படுத்தி, கட்டுரை எழுதச் செய்தல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- ➢ கருத்து
- ➢ வடிவம்
- ➢ மொழிநடை
- ➢ வாக்கிய அமைப்பு
- ➢ மேற்கோள் பயன்பாடு

## வளப்பகுதி

"பச்சை முடி செழித்த மலை
கல்குவாரி முதலைகளால்
மெல்ல மெல்ல விழுங்கப்பட்டு
ஊமையாய்க் காட்சியளிக்கிறது.
கொள்ளையர்களுக்குத்
தன் உறுப்புகளைக் களவு கொடுத்து
பலவீனமாய் மெலிந்திருக்கும்
ஏழையைப் போல்
எரிமலைகளை
யாரும் நெருங்குவதில்லை."

### தமிழக ஆறுகளின் பட்டியல்

அடையாறு
அமராவதி
அரசலாறு
அர்ச்சுனன் ஆறு
ஓடம் போக்கி ஆறு
பவானி ஆறு
சிற்றாறு
செஞ்சி ஆறு

செய்யாறு
கபினி ஆறு
கடனா நதி
கல்லாறு
காவிரி ஆறு (தமிழகத்தின் பெரிய ஆறு)
கோரையாறு
கெடிலம் ஆறு
கோள்ளிடம் ஆறு
குடமுருட்டி ஆறு
குண்டாறு
குந்தா ஆறு
குதிரை ஆறு
குழித்துறை ஆறு
நங்காஞ்சி ஆறு
கோமுகி ஆறு
கோதையாறு
மலட்டாறு
மஞ்சளாறு
மணிமுத்தாறு
சிறுவாணி ஆறு
தென்பெண்ணை ஆறு
தாமிரபரணி ஆறு
வைகை ஆறு

## கேரள ஆறுகள்

கேரளத்தில் மொத்தம் 44 ஆறுகள் ஓடுகின்றன.

கேரள ஆறுகளின் பட்டியல்

பெரியாறு
இடமலயாறு
செறுதோணிப்புழா
முல்லை
முதிரப்புழா
பெரிஞ்சான் குட்டி ஆறு
பாரதப்புழா

தூதப்புழா
காயத்ரிப்புழா
கல்ப்பாத்திப்புழா
கண்ணாடிப்புழா
பம்பா ஆறு
சாலியாறு
சாலக்குடிப்புழா
கடலுண்டிப்புழா
அச்சன் கோவிலாறு
கல்லடை ஆறு
மூவாற்றுபுழா ஆறு
வளப்பட்டணம் ஆறு
சந்திரகிரிப் புழா
மணிமலையாறு
வாமனபுரம் ஆறு
குப்பம் ஆறு
மீனச்சிலாறு
குற்றியாடி ஆறு
கரமனை ஆறு
ஷிரீய ஆறு
கரிங்கோட்டு ஆறு
இத்திக் கரையாறு
நெய்யாறு
மாகிப்புழா
கீச்சேரிப் புழா
பிரம்பா ஆறு
உப்பாள ஆறு
கருவண்ணூர் ஆறு
அஞ்சரக்கண்டியாறு
திரூர் புழா
நீலேஷ்வரம் ஆறு
பள்ளிக்கல் ஆறு
கோரப்புழா
மோக்ரால் ஆறு
காவேரிப்புழா
புழாக்கல் ஆறு

மானம் ஆறு
தலச்சேரி ஆறு
சிற்றேரி ஆறு
கல்லாயிப் புழா
ராமபுரம் ஆறு
அயிரூர் ஆறு
பாங்கர மஞ்சேசுவர ஆறு

## கவிதை

"மலையினில் அருவி தோன்றும்
மனங்குளிர் தென்றல் தீண்டும்!
தொலைவினில் உள்ள மேகம்
தூறலைத் தூறிச்செல்லும்!
குலைகளைச் சாய்த்துத் தென்னை
குமரிபோல் காட்சி நல்கும்!
கலைமிகு காட்சி காண
களிப்பினில் உள்ளம் துள்ளும்!"

## மரம் பற்றிய வாசகம்

'நம் உயிர் காக்கும் மரங்களை அழிக்கக்கூடாது.'

'ஒரு மரத்தையாவது நட்டுச் சூழலைப் பாதுகாப்போம்'

'மாசில்லா காற்றைப் பெற மரம் நடுவதே சிறந்த வழி'

'காகிதம் தரும் மரத்தை ஆயுதம் கொண்டு அழிக்காதே.'

## மரங்கள் பற்றிய பொன்மொழிகள்

கற்களை எறிந்தாலும் கனி தரும் மரம்!

– ஸ்வீடன்.

பாலைவனத்திலிருப்பவன் மரங்களைத்தான் தேடுகிறான்

– இந்தியா

மரங்களை நடுபவன் பிறரை நேசிக்கிறான்
தன்னையும் நேசிக்கிறான்

– ஸ்காட்லாந்து

## சிறுபஞ்சமூலம்.

"குளம்தொட்டுக் கோடுபதித்து வழிசீத்து
உளம்தொட்டு உழுவயல் ஆக்கி – வளம்தொட்டுப்
பாடுபடும் கிணற்றோடு என்று இவ்வைம் பாற்படுத்தான்
ஏகும் சொர்க்கத்து இனிது" (64)

மாதிரி

## உறுதிமொழி

மார்ச் 21–ஆம் தேதி உலக காடுகள் தினத்தைக் கொண்டாடுகிறோம். காடு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்த தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. மனிதனுக்கும் விலங்குகளுக்கும் காடுகள்தாம் புகலிடம். காடு என்பது வெறும் மரங்கள் மட்டுமல்ல. அது ஓர் உயிரியல் சார்ந்த கட்டமைப்பு என்பதை நான் புரிந்துகொண்டேன். எனவே, ஒரு மரம் வெட்டப்பட்டால் 10 மரங்கள் நடப்படவேண்டும் என்ற விதியை நான் மதிப்பேன். காடுகள்தாம் இந்த உலகத்தின் உயிர்மூச்சு. எனவே. காடுகளை அழிவின் பிடியிலிருந்து காப்பது நம் அனைவருடையவும் கடமை. மரங்கள் வளர்ப்போம் மழை பெறுவோம் சந்ததிகளைக் காப்போம் என்னும் விழிப்புணர்வை அனைவரிடமும் எடுத்துக் கூறுவேன் என்று உறுதி கூறுகிறேன்.

## இரட்டைக்கிளவி

பிரித்தால் பொருள் தராது
ஒரு சொல் இரண்டுமுறை மட்டுமே வரும்
சொற்கள் இணைந்தே நிற்கும்
வினைக்கு அடைமொழியாகக் குறிப்புப் பொருளில் வரும்.
எ.கா: சல சல, மள மள
மள, மளன்னு வேகமாக வேலையை முடி
மள என்பது தனித்துப் பார்த்தால் அச்சொல் பொருள் தராது.

**எ.கா.** : கமகம கடகட சலசல மடமட

## அடுக்குத்தொடர்

பிரித்தால் பொருள் தரும்
ஒரு சொல் இரண்டு முதல் நான்கு முறை வரை வரும்
சொற்கள் தனியே நிற்கும்

விரைவு, வெகுளி, உவகை, அச்சம், அவலம் ஆகிய பொருட்கள் காரணமாக வரும்

எ.கா: பாம்பு பாம்பு, ஓடி ஓடி

## பாடல் பொருள்

### தேவாரப்பாடல் – சுந்தரமூர்த்திநாயனார்.

மான்களின் கூட்டமும், மான்வகைகளின் கூட்டமும், மயில்களின் கூட்டமும் எங்கும் பொருந்தித் தம் விருப்பப்படியே தமக்குரிய உணவுகளைத்தேடி உண்டு, பெரிய சுனைகளில் உள்ள நீரைக் குடித்து, பூத்த பெரிய மரங்களில் உராய்ந்து அவற்றின் செறிவூடே சென்று, தேமாமரச் சோலையின் நிழலில் உறங்குகின்ற, திருப்பருப்பதம் என்னும் மலையே எங்கள் சிவபிரானது மலை.

### புறநானூறு பாடல்

பாடியவர் : முரஞ்சியூர் முடிநாகராயர்

பாடப்பட்டோர் : சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்.

திணை : பாடாண்

பொறுமை, ஆராய்ச்சி விரிவு, ஆற்றல், ஆட்சித்திறன், அருள் ஆகியவற்றிலே ஐம்பெரும் பூதங்களான நிலனையும் வானையும் காற்றையும் நெருப்பையும் நீரையும் முறையே ஒப்பவன் அவன்.

நிலம்போல் பொறுமை, வானம்போல் சூழ்திறன், காற்றைப்போல் வலிமை, தீயைப்போல் எரிக்கும் திறன், நீரைப் போல் அளிக்கும் கொடைத்திறன் ஆகியவற்றை உடையவன் நீ.

### சீவக சிந்தாமணி – திருத்தக்கத்தேவர்.

**ஏமாங்கத நாட்டு வளம்**

தெங்கின் முற்றிய காய் வீழ்ந்ததனால் பாக்குமரம் அழகிய, மாட்சி பொருந்திய, தேன் போல இனிய நீரையுடைய தாறு (குலை) கிழித்து, பலாவின் பழத்தைப் பிளந்து புகழால், எல்லாத்திசையிலும் பெயர் பரவியது. (ஏமாங்கதநாடு)

### சிலப்பதிகாரம் – இளங்கோவடிகள்

**வஞ்சிக்காண்டம்**

**காட்சிக்காதை**

விளையாட வேண்டும் என விரும்பிய வானவன், பேரியாற்றங்கரைக்குச் (இக்காலப் பெரியாறு) சென்றான். அங்கே அழகிய காடு, புனல் ஓடும் பகுதி, மூன்று பக்கம் நிலம் சூழ்ந்திருக்கும் நிலத்துருத்தி, இளமையான மரங்கள்,

மணல் திட்டுகள் (அரங்கு), பள்ளி (படுப்பதற்கு ஏற்ற இடங்கள்) அனைத்தும் பரவிக்கிடந்தன. அது 140 யோசனை தொலைவு விரிந்து பரந்திருந்தது. அந்த இடத்திற்கு மிகப் பெரிய யானை ஒன்றின் மீது ஏறிக் கண்டு களித்தவண்ணம் சென்று கொண்டிருந்தான். கோங்கம், வேங்கை, கொன்றை, நாகம், திலகம், ஆரம் ஆகிய பூக்கள் உதிர்ந்து கிடந்தன. நீர் ஒருபுறம் ஓடிக்கொண்டிருந்தது. மதுகரம் (தேனீ), ஞிமிறு (வண்டு) போன்றவை பாடிக்கொண்டிருந்தன.

['யோசனை' என்பது பழங்காலத்தில் தூரத்தை அளக்கப் பயன்படுத்தப்பட்ட நீள அலகாகும். இது 4 மைல் முதல் 9 மைல் வரை நீளம் இருக்கலாம் என்று கருதப்படுகிறது.]

## உவமை அணி விளக்கம்

ஒரு பொருளை இன்னொரு பொருளுடன் ஒப்பிட்டுக் கூறுவது. கவிஞர் தாம் சொல்ல எடுத்துக்கொண்ட பொருளை வேறு ஒரு பொருளுடனோ பல பொருள்களுடனோ, அப்பொருளின் பண்பு, தொழில், பயன் என்பவற்றைக் காரணமாகக் கொண்டு இரு பொருளுக்கும் இடையே உள்ள ஒப்புமையைத் தெளிவுபடுத்தும் படிக் கூறுவதாகும்.

எ.கா: அணை கடந்த வெள்ளம் போல
சூரியனைக் கண்ட பனி போல

## துண்டுப்பிரசுரம்

'நீரின்றி அமையாது உலகு'

அன்புடையீர்,

நாம் வாழும் வாழ்க்கை இப்பூமியின் தானம்தான். நிலம், நீர் போன்றவை வாழ்வின் ஆதாரங்கள். நீர்வளம் நாட்டின் உயிர்வளம். நாம் இன்று நீர்வளம் குறையும் செயல்களை அதிகமாகச் செய்துவருகிறோம். ஆறு, குளம், குட்டை, கிணறு, ஏரி, அணைகள் இவற்றைத் தூய்மையாகப் பாதுகாத்தல் அவசியம். நாகரீக வளர்ச்சி, நம்மைச்சுற்றி உள்ள வளங்களின் வளர்ச்சியை மண்ணிற்குள் புதைத்து வருகிறது. இந்நிலை உயிர்களின் அழிவிற்குக் காரணமாகும்.

'நீரின்றி அமையாது உலகு' என்பது போல ஒரு நாட்டின் வளமான வளத்திற்கு நீர்நிலைகளின் அதிகரிப்பு மிகவும் அவசியமானதன்றோ! மழைநீரைச் சேமிப்போம்! வறட்சியைத் தடுத்து நிறுத்துவோம்! வளமான வாழ்வைப் பெறுவோம்!

இடம்: கொல்லம் — இவண்
தேதி: 05/06/2024. — பசுமை மன்றம்

## புகார்க் கடிதம் மாதிரி

**அனுப்புநர்**

எழிலன்
வீட்டு எண் 215/5
விவேகானந்தா நகர்
அல்லி நகரம்

**பெறுநர்**

ஊராட்சி மன்றத்தலைவர்,
ஊராட்சி மன்ற அலுவலகம்.
அல்லி நகரம்.

ஐயா,

பொருள் : ஏரியைத் தூர்வாருதல்/ சுத்தப்படுத்துதல் தொடர்பான விண்ணப்பம்.

மதிப்பிற்குரிய ஊராட்சிமன்றத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். எங்கள் ஊர் அல்லிநகரம். சுமார் 1000 வீடுகள் உள்ளன. ஏறக்குறைய 3000 பேர் வசிக்கும் பகுதி. ஊரின் நடுவே அழகான ஏரி ஒன்று உள்ளது. அனைத்து நீர்த் தேவைகளையும் நாங்கள் அதன்மூலம் நிறைவுசெய்து கொண்டிருந்தோம். ஆனால், தற்போது அந்த ஏரி குப்பைகளால் நிரப்பப்பட்டு, பயன்பாடற்றுக் கிடக்கிறது. தண்ணீர்ப் பற்றாக்குறை அதிகரித்துள்ளது. தண்ணீரில்லாமல் ஒன்றுமே செய்ய முடியவில்லை. வேளாண்மை முடங்கிவிட்டது. அலுவலக வேலைக்குக்கூட சரியான நேரத்தில் செல்ல முடியவில்லை. எங்கள் வாழ்வாதாரமாக விளங்கும் அந்த ஏரியைத் தூய்மைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறோம்.

இடம்: அல்லி நகரம் — இப்படிக்கு
நாள்: 15–06–2024 — ஊர்மக்கள்

## அலகு மதிப்பீடு

1. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுங்கள்.

   'முத்தமிழ்க் காப்பியம்' என அறியப்படும் நூல்

   அ. மணிமேகலை　　ஆ. சிலப்பதிகாரம்

   இ. வளையாபதி　　ஈ. சீவகசிந்தாமணி

2. கீழ்வரும் சொற்களை அகரவரிசைப்படுத்திப் பொருள் எழுதுங்கள்.

   ஞாலம், யாக்கை, அடுபோர், மருங்கு

3. நதிகள் இணைப்பால் ஏற்படும் நன்மைகளைப் பட்டியலிடுங்கள்.

4. உங்கள் ஊரில் பாழ்பட்டுக் கிடக்கும் ஏரியைத் தூய்மைப்படுத்த ஊராட்சி மன்றத் தலைவருக்குப் புகார்க் கடிதம் எழுதுங்கள்.

5. பள்ளி ஆண்டு மலரில் வெளியிட 'இயற்கைப் பாதுகாப்பும் நாட்டின் வளர்ச்சியும்' எனும் தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.

# மாதிரி அலகுத் திட்டம்

| | | |
|---|---|---|
| வகுப்பு | : | 9 |
| அலகு | : | ஒரே ஒரு பூமி |
| துணை அலகுகள் | : | இயற்கை<br>விடியலைத் தேடி<br>உயிர்த்துளி |

## கற்றல் இலக்குகள்

- இயற்கை அழகை உணர்ந்து குறிப்பு எழுதுகிறார்கள்.
- பல்சுவைப் பாடல்களின் வழி இயற்கைச் செல்வங்கள் குறித்துக் கலந்துரையாடி வகைப்படுத்திப் பட்டியலிடுகிறார்கள்.
- நகரமயமாக்கலின் விளைவாகச் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகின்றது என்பதை உணர்ந்து சொற்பொழிவு ஆற்றுகிறார்கள்.
- நதிகள் நாகரீகத்தின் தொட்டில்கள் என்னும் கருத்தின் அடிப்படையில் நீர் மேலாண்மை குறித்துக் கட்டுரை எழுதுகிறார்கள்.
- பண்டைய கால இயற்கைச் சூழலைத் தற்கால இயற்கைச் சூழலோடு ஒப்பீடு செய்கிறார்கள்.
- இயற்கைச் செல்வங்களைப் பாதுகாக்கும் வகையில் பல்வேறு செயல்களில் ஈடுபடுகிறார்கள்.

## துணைக் கருவிகள்

- பாடநூல்
- ஆசிரியர் பனுவல்
- கரும்பலகை
- காணொளிக் காட்சிகள்
- சார்ட்
- செய்தித்தாள் துணுக்குகள்
- நூலகம்

## மனப்பான்மை

- இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாதல்.
- சுற்றுச்சூழல் மாசடைவதைத் தடுக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுதல்.
- நீர் ஆதாரங்களை மேலாண்மை செய்து பயன்படுத்தும் முறைகளை அறிந்து கொள்ளுதல்.

## செயல்பாடுகள்

- உறுதிமொழி தயார் செய்தல்.
- விமர்சனக் குறிப்பு எழுதுதல்.
- சிறு குறிப்பு எழுதுதல்.
- ஒப்பீட்டுக் குறிப்பு எழுதுதல்.
- துண்டுப் பிரசுரம் தயாரித்தல்.
- சொற்பொழிவுக் குறிப்பு தயாரித்தல்.
- கதையை விமர்சனம் செய்தல்.
- விளக்கக் குறிப்பு எழுதுதல்.
- புகார்க் கடிதம் எழுதுதல்.
- தலையங்கம் தயாரித்தல்.
- கட்டுரை எழுதுதல்.

## மொழிக் கூறுகள்

- அடுக்குத் தொடர்
- இரட்டைக் கிளவி
- தூயத் தமிழ்நடை
- வாக்கிய அமைப்பு

## மதிப்பீடு

- சுய மதிப்பீடு
- குழு மதிப்பீடு
- மதிப்பீட்டுக் குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்தல்.

# மாதிரி பாடத்திட்டம்

| | | |
|---|---|---|
| வகுப்பு | : | 9 |
| அலகு | : | ஒரே ஒரு பூமி |
| துணை அலகுகள் | : | இயற்கை |
| பாடப்பகுதி | : | காடு |
| நேரம் | : | 40 நிமிடங்கள் |
| கற்றல் இலக்கு | : | இயற்கை அழகை உணர்ந்து குறிப்பு எழுதுகிறார்கள். |
| துணைக் கருவிகள் | : | பாடநூல், ஆசிரியர் பனுவல், காணொளிக் காட்சி |

| கற்றல் செயல்பாடுகள் | பிரதிபலிப்பு |
|---|---|
| **நுழைவுச் செயல்பாடு**<br><br>'மூங்கில் காடுகளே' என்ற திரைப்படப் பாடல் காட்சியைக் காண்பித்தல்.<br><br>காட்சியின் அடிப்படையில் சில வினாக்களை வினவுதல்.<br><br>• இது போன்ற காட்சிகளை நேரடியாகப் பார்த்துள்ளீர்களா?<br>• காட்சிகளைப் பார்த்த போது உங்கள் மனதில் தோன்றிய எண்ணங்கள்?<br>• இயற்கைக் காட்சிகள் நிறைந்த (மூணார், ஊட்டி, கொடைக்கானல்) இடங்களுக்கு ஏன் சுற்றுலா செல்கின்றோம்?<br><br>இதுபோன்ற வினாக்களை எழுப்பி வகுப்பறையில் கலந்துரையாடல் நடத்துதல்.<br><br>கலந்துரையாடலில் வெளிப்படும் முக்கியமான கருத்துகளைக் கரும்பலகையில் எழுதுதல்.<br><br>**கவிஞரை அறிமுகம் செய்தல்**<br><br>மாணவர்களுக்குத் தெரிந்த கவிஞர்களின் பெயர்களைக் கூறச் சொல்லுதல். | |

| | |
|---|---|
| திரைப்படப் பாடலாசிரியர்களின் படங்களைத் திரையில் காண்பித்தல் (வாலி, கண்ணதாசன், வைரமுத்து).<br><br>கண்ணதாசனைக் கண்டறியச் செய்தல்.<br><br>அவரது சிறப்பைச் சுருக்கமாகக் கூறுதல்.<br><br>(எழுத்தாளர் – சேரமான் காதலி, ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி, தைப்பாவை சாகித்திய அகடாமி விருது.)<br><br>**பாடப்பகுதியை வாசித்தல்**<br><br>• 'காடு' பாடப்பகுதியைத் தனியாகவும் குழுவாகவும் வாசிக்கச் செய்தல்.<br>• கடினமான சொற்களுக்கு ஆசிரியர் பொருள் கூறுதல் அல்லது கரும்பலகையில் எழுதுதல்.<br>• ஒவ்வொரு குழுவும் பாடப்பகுதியின் கருத்தைக் கலந்துரையாடிக் குறிப்பாக எழுதி வெளியிடச் சொல்லுதல்.<br>• வெளியிடலின் போது முக்கியமான கருத்துகளை ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல்.<br>• சிறப்பாக வெளியிட்டக் குழுவைப் பாராட்டுதல்.<br>    • இயற்கை அழகு<br>    • காடுகளின் முக்கியத்துவம்<br>    • உயிரினங்களின் உறைவிடம்<br><br>கலந்துரையாடலில் அனைத்து மாணவர்களின் பங்களிப்பையும் உறுதிச் செய்தல். பின்தங்கிய மாணவர்கள், எழுதுவதற்கு ஆசிரியர் உதவிச் செய்தல். | |

## தொடர் செயல்பாடு

- 'காடு' என்றக் கட்டுரையில் இடம் பெற்றுள்ள வர்ணனைச் சொற்களைக் கண்டறிந்து எழுதி வரச் சொல்லுதல்.

# 2 நேசமே சுவாசம்

**அலகு அறிமுகம்**

இவ்வுலகில் அனைத்து உயிர்களும் ஒன்றிற்கொன்று பிணைந்திருப்பது 'நேசம்' எனும் உயரிய பண்பினாலன்றோ! சக மனிதனிடம் மட்டுமல்ல. சக உயிர்களிடமும் அன்புகாட்டுவதே மனிதநேயம். உயிரிரக்கப் பண்பு காலங்காலமாக இலக்கியங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி, புறாவின் துயர் தீர்த்த சிபி, பசுவின் கண்ணீரைத் துடைத்த மனுநீதிசோழன்.....என்று எண்ணிலடங்கா மனிதநேயச் செயல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"

என்று அன்பின் பெருமையை வள்ளுவப்பெருமான் உலகிற்குக் காட்டியுள்ளார். "வாடிய பயிரைக் கண்டபோது வாடினேன்" என்று வள்ளலார் அஃறிணைப் பொருட்களிடம் காட்டிய அன்பு வரலாற்றில் இடம்பெற்றுள்ளது.

முன்னேற்றப்பாதையில் செல்லும் மனித சமூகம் உயிரிரக்கப் பண்புகளை மறந்து வருகிறது. இம்மாற்றம் வாழ்வின் அடித்தள அமைப்பைச் சிதைத்துவிடும். அன்பு, இரக்கம், பாசம், கருணை, நேசம் போன்ற மனிதநேயப் பண்புகளை உயர்வாக எண்ணும் சிந்தனையை வளர்ப்பது மிகவும் அவசியமாகும். இன்றைய சமூகம் அப்பண்புகளை மறந்துவிடாமல் பின்பற்றவும், சமூகத்தோடு தன்னை இணைக்கும் செயல்களில் ஈடுபடவும் வேண்டும். மாறிவரும் வாழ்க்கைச் சூழலில் மனிதநேயப் பண்பு மறைந்துவிடாமல், சமூகத்தோடு தொடர்பு ஏற்படுத்தும் சங்கிலியாக அமைதல்வேண்டும் எனும் உயரிய நோக்கத்தை மாணவர்களுக்கு எடுத்துக் கூறுவதே இவ்வலகின் நோக்கமாகும்.

இவ்வலகின் கீழ் மூன்று கருத்தலகுகள் இடம் பெற்றுள்ளன. 'உதவிக்கரம் நீட்டுவோம்' எனும் முதல் கருத்தலகில் மனிதநேயச் சிந்தனையை வளர்க்கும் பாடப்பகுதிகள் இடம்பெற்றுள்ளன.

'தன்னம்பிக்கை' எனும் இரண்டாவது கருத்தலகின் கீழ் தன்னம்பிக்கை வாழ்வின் உச்சத்தை அடையச்செய்யும் எனும் உயரிய எண்ணத்தை மையமாகக் கொண்ட பாடப்பகுதிகள் அடங்கியுள்ளன.

மூன்றாவது கருத்தலகான 'நல்லிணக்கம்', அனைவரும் ஒருவருக்கொருவர் உதவிசெய்து பொதுமைப் பண்போடு நடப்பது நாட்டிற்கு நலம் பயக்கும் எனும் கொள்கையை வலியுறுத்துகிறது.

இந்த அலகைக் கற்பிக்கத் தேவையான காலம்
23 பிரிவேளைகள்

| கரு | துணைக்கரு | இலக்கிய வடிவங்கள் | கற்றல் நோக்குகள் | | | மொழிக் கூறுகள் | மொழி வெளியீட்டு வடிவங்கள் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கருத்துகள் | திறன்கள் | மனப் பான்மைகள் | | | |
| சமூக மதிப்புகள் (நேசமே சுவாசம்) | • மனிதநேயம்<br>• தன்னம்பிக்கை<br>• நல்லிணக்கம் | • சிறுகதை<br>• வாழ்க்கைக் குறிப்பு<br>• விளக்கக் கட்டுரை<br>• கவிதை | • தற்காலத்தில் மனிதநேய குணங்கள் குறைந்து வருகின்றன.<br>• அன்பு, கருணை, ஈதல், உதவுதல், சமூக அக்கறை ஒன்றிணைந்து செயல்படுதல் போன்றவை மனிதநேயப் பண்புகள் ஆகும்.<br>• தமிழ் இலக்கியங்கள் மனிதநேய மனப்பான்மை யை உருவாக்கு கின்றன.<br>• சமூக நல்லிணக்க மனப்பான்மை யை ஏற்படுத்துதலும், சமூகத்தின் மீது அக்கறை கொள்ளுதலும் தலையாய கடமையாகும். | • கவிதைகளை இராகத்துடனும் குரல் ஏற்ற இறக்கத்துடனும் பாடும் திறன் பெறுதல்.<br>• அகராதி தயாரிக்கும் திறன் பெறுதல்<br>• இணையவழித் தகவல்களைச் சேகரிக்கும் திறன் பெறுதல்.<br>• தகுந்த உச்சரிப்புடன் கதையை வாசிக்கும் திறன் பெறுதல். | • மனிதநேயச் செயல்களில் ஈடுபடும் மனநிலையைப் பெறுதல்.<br>• தேசிய நலன்பேணும் இயக்கங்களில் பங்கு பெறுதல்.<br>• நாடு, மொழி, மதம், நல்லிணக்க மனப்பான்மை யினைப் பெறுதல். | • உயிரளபெடை<br>• அகரவரிசைப் படுத்தல்<br>• இருபொருள் தரும் வாக்கியங்களை அமைத்தல் | • குறிப்பு<br>• தலையங்கம்<br>• விமர்சனம்<br>• பாராட்டுக் கடிதம்<br>• கட்டுரை | • சுய மதிப்பீடு<br>• குழு மதிப்பீடு<br>• ஆசிரியர் மதிப்பீடு<br>• மதிப்பீட்டுக் குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்தல் |

## கற்றல் இலக்குகள்

- 'மனிதநேயப் பண்புகளை வளர்ப்பது தலையாய கடமைகளில் ஒன்று' என்ற கருத்தின் அடிப்படையில் சொற்பொழிவு தயார் செய்கிறார்கள்.
- 'இலக்கியத்தில் மனிதநேயம்' எனும் தலைப்பில் கட்டுரை எழுதுகிறார்கள்.
- மனிதநேயப் பண்பு மிக்கவர்களின் வாழ்க்கைக் குறிப்பு தயார் செய்கிறார்கள்.
- இன்றைய வாழ்க்கைச் சூழலுக்கு மனிதநேயப்பண்பு மிகவும் அவசியம் எனும் கருத்தின் அடிப்படையில் பட்டிமன்றக் குறிப்பு எழுதுகிறார்கள்.
- இலக்கியத்தில் பேசப்படும் மனிதப்பண்புகளைச் சுட்டிக்காட்டி நாடகம் எழுதுகிறார்கள்.
- உயிரிரக்கப் பண்பை மையமாகக் கொண்ட பாடல்களை நயம் பாராட்டி எழுதுகிறார்கள்.
- மாறிவரும் வாழ்க்கைச் சூழலில் பின்பற்ற வேண்டிய பண்புகளுள் முக்கியமானது மனிதநேயமே என்பதை வலியுறுத்தி 'உறுதிமொழி' தயார் செய்கிறார்கள்.
- மனிதநேயச் சிந்தனைகளை வெளிக்கொணரும் பல்வேறு மொழி வெளியீட்டு வடிவங்களைத் தயார் செய்கிறார்கள்.
- தன்னம்பிக்கையால் வெற்றிபெற்றவர்களின் வாழ்க்கைக் குறிப்பைத் தயார் செய்கிறார்கள்.

## கற்றல் துணைக்கருவிகள்

- பாடப்புத்தகம்
- ஆசிரியர் பனுவல்
- மனிதநேயம் தொடர்பான படங்கள்
- செய்தித்துணுக்குகள் / குறும்படம்
- நேயமிக்கோரின் வாழ்க்கைக் குறிப்பு
- கட்டுரைகள் / கவிதைகள்
- இதழ்கள், புத்தகங்கள் / ஊடகச் செய்திக் குறிப்புகள்.

## நுழைவுச் செயல்பாடு

ஆசிரியர் ICT வழி மனிதநேயம் குறித்த ஒரு குறும்படத்தை மாணவர்களுக்குக் காண்பித்தல். காட்சியில் கண்ட செய்திகளைக் கூறச் செய்தல். (ஏழைச்சிறுவன் பசியோடு தனக்குக் கிடைத்த உணவுப்பொட்டலத்தைப் பிரிக்கிறான். அருகில் நாய் ஒன்று வருகிறது. உணவின் ஒரு பகுதியை அதற்கு வழங்குகிறான்)

(குறும்படம் அல்லது Chart)

- படத்தில் என்ன பார்த்தீர்கள்?
- சிறுவனின் செயல் பாராட்டுதற்குரியதா?
- இதுபோன்ற அனுபவம் உங்களுக்கு ஏற்பட்டுள்ளதா?
- நீங்கள் ஏதேனும் உதவிகளைப் பிறருக்குச் செய்துள்ளீர்களா?
- பிறருக்குக் கொடுக்கும்போது உங்கள் மனதில் ஏற்படும் மாற்றங்கள் என்னென்ன?

இதுபோன்ற வினாக்கள் மூலம் ஆசிரியர் பிறருக்கு உதவி செய்யும் பண்பிற்கான பொதுப் பெயரைக் கூறச்செய்தல்.

மாணவர்கள் பதிலாகக் கூறிய 'மனிதநேயம்', 'உயிரிரக்கம்' என்ற சொற்களை எடுத்துக்காட்டி விளக்குதல்.

மனிதநேயம் என்றால் என்ன? என்ற வினாவின் மூலம் சிறப்பான ஒரு கலந்துரையாடல் நடத்துதல். மனிதநேயமிக்கவர்களின் படங்களையும் வரலாற்றையும் எடுத்துக்கூறுதல். இம்முறையில் மாணவர்களுக்குப் பாடப்பகுதியைப் பற்றிய ஆர்வத்தை ஏற்படுத்திப், பாடப்பகுதிக்குள் அழைத்துச் செல்லுதல்.

(ஆசிரியர்கள் தங்கள் திறன்களுக்கேற்ப நுழைவுச் செயல்பாட்டை அமைத்துக் கொள்ளலாம்.)

### பாடப்பகுதிகள்

**உதவிக்கரம் நீட்டுவோம்**

- ராஜா வந்திருக்கிறார்
- இலக்கியத்தில் மனிதம்
- ஒரு பிடிசோறு

**தன்னம்பிக்கை**

- பிரணவ மந்திரம்
- பூமியின் தேவதை
- வள்ளுவத்தில் தன்னம்பிக்கை

**நல்லிணக்கம்**

- நாடு
- இளைய பாரதம்
- மலரவேண்டும் மனிதநேயம்

## ராஜா வந்திருக்கிறார்

### செயல்பாடு 1

**சிறுகதை விமர்சனம் எழுதுதல்**

→ பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள 'ராஜா வந்திருக்கிறார்' எனும் சிறுகதையை வாசிக்க வைத்தல்.

→ கதையின் மையக்கருத்தை விளக்கிக் கூறுதல்.

→ மையக்கருத்தைக் குறிப்பேட்டில் எழுதச்செய்தல்.

**கதாபாத்திரச் சிறப்புகள்**

→ சிறுகதையில் இடம்பெற்றுள்ள கதாபாத்திரங்களின் பெயர்களைக்கூறச் செய்தல்.

→ பிடித்த கதாபாத்திரங்கள், பிடித்ததற்கான காரணங்கள் இவற்றைக் குறிப்பேட்டில் எழுதுதல். ஆசிரியர் சரிபார்த்துக் கொடுத்தல்.

→ மாணவர்கள் சேகரித்த தரவுகளை மையப்படுத்தி சிறுகதை விமர்சனம் எழுதச் செய்தல்.

→ சிறந்த விமர்சனக் குறிப்பை வகுப்பில் வெளியிடுதல்.

→ ஆசிரியர், சகமாணவர்கள் மதிப்பீடு செய்தல். நன்றாக எழுதிய மாணவர்களைப் பாராட்டுதல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- மையக்கருத்து
- கதாபாத்திரச் சித்தரிப்பு
- விமர்சன மனப்பாங்கு
- சமூகத்தொடர்பு
- வடிவம், மொழிநடை

# இலக்கியத்தில் மனிதம்

## செயல்பாடு 2

**அருஞ்சொற்பொருள் பட்டியலிடுதல்**

→ ஆசிரியர் புறநானூறு, திரிகடுகம், பொருநராற்றுப்படை போன்ற பாடல்களைச் சீர்பிரித்து வாசித்தல்.

→ கடினச் சொற்களுக்கான பொருள் கண்டறிதல்.

→ அருஞ்சொற்பொருள் பட்டியலைக் கரும்பலகை/விளக்கப்படத்தில் (Chart) எழுதிக் காண்பித்தல்.

### அருஞ்சொற் பொருள்

| | | |
|---|---|---|
| தமியர் | – | தனித்தவர் |
| முனிதல் | – | வெறுத்தல் |
| துஞ்சல் | – | சோம்பல் |
| அயர்வு | – | சோர்வு |
| மாட்சி | – | பெருமை |
| நோன்மை | – | வலிமை |

## செயல்பாடு 3

**பாடல்களின் மையக்கருத்தை எழுதுதல்**

→ ஆசிரியர் சங்க இலக்கியப் பாடல்களை வாசித்துக் காட்டுதல்.

→ மாணவர்களின் வாசிப்பிற்குப் பாடலை உட்படுத்துதல்.

→ குழுவாக வாசித்துக் கலந்துரையாடுதல்.

→ சங்க இலக்கியத்தில் மனிதநேயம் பற்றிய தகவல்களை வரிசைப்படுத்துதல்.

- அமிழ்தம் கிடைத்தாலும் தான்மட்டும் உண்ணாமல் பிறருக்கும் கொடுப்பவர்கள் இருப்பதால்தான் இவ்வுலகம் நிலைபெறுகிறது.
  (புறநானூறு)
- தானம், ஒழுக்கநெறி, பலபொருளின்மேல் பற்றுக் கொள்ளாமை இவைமூன்றும் நல்வினைகள். ( திரிகடுகம் )
- பரிசுபெற்ற பொருநன், தன்னைப்போல் வறுமையில் வாடும் பொருநனை வழிப்படுத்துவது. தான்மட்டும் அனுபவிக்காமல் பிறரையும் அனுபவிக்கச் செய்யும் மனிதப்பண்பு. (பொருநராற்றுப்படை)

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- சுருக்கம்
- தெளிவு
- கருத்து

## ஒருபிடி சோறு

### செயல்பாடு 4

**கட்டுரை எழுதுதல்**

→ 'ஒருபிடி சோறு' என்ற பாடப்பகுதியை வாசித்து அன்னதானத்தின் சிறப்புகளை எழுதச் செய்தல்.

→ ஆசிரியர் மாணவர்களுக்கு மனிதநேயம் வெளிப்படும் நூற்களை வழங்குதல்.

→ வாசிக்கச் செய்து, கலந்துரையாடல் நடத்திக் குறிப்புகள் தயாரிக்கச் செய்தல்.

→ வரலாற்றுச் செய்திகளை (பாரி, அதியமான், மனுநீதிச்சோழன், சிபிச்சக்கரவர்த்தி போன்றோர்களை) நினைவு படுத்துதல்.

→ பாடப்பகுதியில் கற்றுக்கொண்ட கருத்துகளின் அடிப்படையில் கட்டுரை எழுதுதல்.

→ ஆசிரியர் மேன்மைப்படுத்தி, குறிப்பேட்டில் எழுதச்செய்தல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- வடிவம்
- மேற்கோள் பயன்பாடு
- சொல்லாட்சி
- மொழிநடை
- கருத்துகளின் தெளிவு

# பிரணவ மந்திரம்

## செயல்பாடு 5

**வாழ்க்கைக் குறிப்பு தயார் செய்தல்**

→ 'பிரணவ மந்திரம்' பாடப்பகுதியை மாணவர்களிடம் வாசிக்கச் சொல்லுதல்.

→ பிரணவ், இரு கைகள் இல்லாமல் சாதித்த செய்திகளைப் பட்டியலிடுதல்.

கால்களால் ஓவியம் வரைதல், எழுதுதல், சாப்பிடுதல், வீட்டைச் சுத்தம் செய்தல். ஒலிம்பிக்ஸ் போட்டியில் வெற்றிபெறுதல், சைக்கிள் ஓட்டுதல், .....

இதனடிப்படையில் வாழ்க்கைக் குறிப்பைத் தயார் செய்யச் செய்தல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- வடிவம்
- கருத்துத்தெளிவு
- மொழிநடை

## செயல்பாடு 6

**வரவேற்புரை எழுதுதல்**

→ பள்ளியில் நடைபெற்ற விழாக்களின் நிகழ்ச்சிகளை நினைவுகூர்தல்.

→ முதலாவதாக வரவேற்புரை எவ்வாறு அமைந்திருக்கும் என்பதை எடுத்துக்கூறுதல்.

→ சிறப்பு விருந்தினரின் சிறப்புகளைச் சுட்டிக்காட்டி வரவேற்புரை எழுதச் செய்தல்.

→ பிரணவ் பற்றிய செய்திகளைப் பாடநூல், இணையம் மற்றும் இதழ்களிலிருந்து திரட்டக் கூறுதல்.

→ திரட்டிய தகவல்களை வரிசைப்படுத்தி வழங்குதல்.

→ பிரணவ் அவர்களை வரவேற்கும் வகையில் வரவேற்புரை தயாரிக்கச் செய்தல்.

→ வகுப்பில் மாதிரி வரவேற்புரை ஒன்றை ஆசிரியர் கூறுதல்.

→ மாணவர்களை உற்றுநோக்கச் செய்து அதுபோல எழுதச் செய்தல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- வடிவம்
- மொழிநடை
- சொல்லாட்சி
- தகவல்கள்

## செயல்பாடு 7

**தன்விவரப்பட்டியல் தயார் செய்தல்**

→ 'பூமியின் தேவதை' பாடப்பகுதியை வாசித்தல்

→ கருத்துகளைப் புரிந்துகொள்ளுதல்

→ தொடர்பான ஒன்றிரண்டு செய்திகளை ஆசிரியர் ICT வழிக் காண்பித்தல்.

→ தன்விவரப் பட்டியலில் இடம்பெற வேண்டிய விவரங்களின் வரிசைமுறையைப் பற்றிக் கலந்துரையாடுதல்

→ அன்னை தெரசாவின் மனிதநேயச் சிந்தனைகளைப் புரிந்துகொண்டு வாழ்க்கைக் குறிப்பின் அடிப்படையில் தன்விவரப்பட்டியல் தயாரிக்கச் செய்தல்.

**தன்விவரப் பட்டியல்**

பெயர் :

பிறப்பு :

பெற்றோர் :

கல்வி :

பணி :

சாதனைகள் :

விருதுகள் :

இறப்பு :

# வள்ளுவத்தில் தன்னம்பிக்கை

## செயல்பாடு 8

**அகரவரிசைப்படுத்துதல்**

→ 'வள்ளுவத்தில் தன்னம்பிக்கை' என்னும் பாடப்பகுதியை வாசிக்கச் செய்தல்

→ பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள கடினச் சொற்களை எடுத்து எழுதச் செய்தல்

→ கடினச் சொற்களை அகர வரிசைப்படுத்தக் கூறுதல்

→ அகராதியின் துணையுடன் பொருள் கண்டறிதல்

மடி, துயில், அசாவாமை, ஊழ்

| | | |
|---|---|---|
| அசாவாமை | – | தளராமை |
| ஊழ் | – | விதி |
| துயில் | – | உறக்கம் |
| மடி | – | சோம்பல் |

இதுபோன்று பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள கடினச் சொற்களைக் கண்டறிந்து அகரவரிசைப்படுத்தி பொருள் எழுதச்செய்தல்.

## நாடு

### செயல்பாடு 9

**மையக்கருத்து எழுதுதல்**

→ ஆசிரியர் 'நாடு' என்னும் கவிதையை வாசித்தல்.

→ மாணவர்களை வாசிக்கச் சொல்லுதல்.

→ கடினச் சொற்களின் பொருளைக் கண்டறியச் செய்தல்.

→ சீர் பிரித்து வாசிக்கச் செய்தல்.

→ அனைத்து மாணவர்களும் வாசித்தனர் என்பதை ஆசிரியர் உறுதி செய்தல்.

→ பாடப்பகுதியில் இருந்து பெற்றுக்கொண்ட செய்திகளின் அடிப்படையில் பாடலின் மையக் கருத்தை எழுதச் செய்தல்.

→ பின்தங்கிய மாணவர்களுக்கானச் செயல்பாட்டையும் ஆசிரியர் உறுதி செய்தல்.

### செயல்பாடு 10

**நயம் பாராட்டி எழுதுதல்**

→ நாடு என்னும் பாடலின் மையக்கருத்தைக் குறிப்பாக எழுதுதல்

→ பாடலில் இடம்பெற்றுள்ள சொல் நயங்களைக் கண்டறிதல்.

→ சொல் நயம் பற்றிய விளக்கத்தை ஆசிரியர் வழங்குதல்.

**மோனை நயம்**

பாடலில் அடிதோறும் முதல் எழுத்து ஒன்றுபோல் வருவது மோனை எனப்படும்.

(எ.கா.)

அறம்நாடு அருள்நாடு அன்பைநாடு
அடக்கத்தை ஆள்வினையை அறிவை நாடு

**எதுகை நயம்**

பாடலில் அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வருவது எதுகை எனப்படும்.

(எ.கா.)

நல்லவனாய் வாழ்கின்ற எண்ணம் நாடு

நல்லுழைப்பு முயற்சியினில் வெற்றி நாடு

**இயைபு**

பாடலில் இறுதிச் சொல்லோ, எழுத்தோ ஒன்றுபோல் வந்தால் அது இயைபு எனப்படும்.

'நாடு' எனும் கவிதையில் 'நாடு' எனும் சொல் அனைத்து அடிகளிலும் இறுதியில் வந்துள்ளதால், இயைபு நயமிக்குள்ளது.

**பொருள் நயம்**

பாடலின் திரண்ட கருத்தை விளக்கி எழுதுவது பொருள் நயம் ஆகும்.

**அணி நயம்**

பாடலில் இடம்பெற்றுள்ள அணியைக் கண்டறிந்து எழுதுவது அணி நயம் ஆகும். 'நாடு' என்ற கவிதையில் ஆசிரியர் கூறவந்த கருத்தை இயல்பாகவே கூறியுள்ளதால் இயல்பு நவிற்சி அணி இடம் பெற்றுள்ளது.

## செயல்பாடு 11

**நீதிநூல்களைப் பட்டியலிடுதல்**

- ஆசிரியர் மாணவர்களை நூலகத்திற்கு அழைத்துச் சென்று நூல்களைத் தேடச் செய்தல். வகைப்படுத்துதல்.
- நீதிநூல்களின் பட்டியல் தயார் செய்தல்.
- ஆசிரியர் நூல்களை வகைப்படுத்துவதில் மாணவர்களுக்கு உதவி செய்தல்.

## செயல்பாடு 12

**வாக்கியம் அமைத்தல்**

- ஆசிரியர் இருபொருள்படும் மாதிரி வாக்கியம் ஒன்றை மாணவர்களுக்கு வழங்குதல். குறிப்பேட்டில் எழுதச்செய்தல்.
- அதுபோன்று 'நாடு' எனும் சொல்லை வைத்து இருபொருள்படும் விதத்தில் வேறு வாக்கியங்களை எழுதச் செய்தல்.

(எ.கா.) இந்தியா நமது நாடு.

நற்பண்பை நாடும் குணத்தை வளர்த்தல் வேண்டும்.

## இளையபாரதம்

### செயல்பாடு 13

**கதாபாத்திரச் சிறப்பை எழுதுதல்.**

- ஆசிரியர் 'இளையபாரதம்' நாடகத்தை இரண்டு மாணவர்களைக் கொண்டு வாசிக்கச் செய்தல், நடிக்கச் செய்தல்.
- நாடகத்தின் மையக்கருத்தைப் புரிந்து கொள்ளுதல்.
- அதன் பிறகு, கதாபாத்திரங்கள் பற்றி எழுதச் செய்தல்.
- இந்த கதாபாத்திரங்கள் சமூகத்திற்குக் கூறும் செய்தியை எழுதி வெளியிடச் செய்தல்.

## மலரவேண்டும் மனிதநேயம்

### செயல்பாடு 14

**பட்டிமன்றக் குறிப்பு தயார் செய்தல்.**

- ஆசிரியர் ICT வழி ஒன்றிரண்டு பட்டிமன்ற நிகழ்ச்சிகளைக் காண்பித்தல்.
- நடுவர், பேச்சாளர்களின் திறன்களைக் கவனிக்கும்படிக் கூறுதல்.
- பட்டிமன்றத்தைப் பற்றிய பொதுவான கருத்துகளைக் கலந்துரையாடி தெளிவு பெறுதல்.

**மாதிரி பட்டிமன்றம் நடத்துதல்.**

- பாடப்பகுதியை வாசித்துப் புரிந்து கொண்டு பட்டிமன்றத்திற்குத் தேவையான தரவுகளைத் திரட்டுதல்.
- காணொளிக்காட்சிகள், வகுப்பறை அனுபவங்கள் வாயிலாகக் கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் பட்டிமன்றக் குறிப்பு எழுதச் செய்தல்.
- ஆசிரியர் மதிப்பீடு செய்து கொடுத்தல்.
- அனைத்து மாணவர்களும் எழுதுகின்றனர் என்பதை ஆசிரியர் உறுதி செய்தல்.
- வகுப்பறையில் பட்டிமன்றம் நடத்துதல்.
- மாணவர்களை நடுவராகவும், பேச்சாளர்களாகவும் பங்கேற்கச் செய்தல்
- ஆசிரியர் ஒருங்கிணைத்தல்.
- அனைத்து மாணவர்களையும் பட்டிமன்ற நிகழ்ச்சியில் பங்குபெறச் செய்தல்.

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- முகமன் கூறுதல்
- கருத்துக்கோர்வை
- தகவல்களை நிலைநாட்டும் திறன்
- நகைச்சுவை உணர்வு.

## வளப்பகுதி

### புறநானூறு

பாடியவர்: கடலுள் மாய்ந்த இளம்பெரும்வழுதி

திணை: பொதுவியல்

துறை: பொருண்மொழிக்காஞ்சி

உலகம் வாழ்கிறது எதனால் என்றால் தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் தாளாண்மை உடையவர் இருப்பதால் தான். அதனால் தான் இந்திரனுக்குரிய அமிழ்தம் கிடைத்தாலும், அது இனிமையானது என்று தனித்து உண்ணமாட்டார்கள்; யாரையும் வெறுக்கமாட்டார்கள்; சோம்பலின்றிச் செயல்படுவார்கள்; பிறர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சுவார்கள்; புகழ்வரும் என்றால், தம் உயிரையே வேண்டுமானாலும் கொடுப்பர்; பழிவரும் என்றால் உலகம் முழுவதும் கிடைப்பதானாலும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; மனம் தளர மாட்டார்கள். இத்தகைய சிறப்புடையவர்களாகித் தமக்காக உழைக்காமல் பிறருக்காக வலிய முயற்சியுடன் உழைப்பவர்கள் இருப்பதனால்தான் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

### திரிகடுகம் – நல்லாதனார்

1. தானம் கொடுக்கும் தகைமையுடைமை, 2. குற்றம் நீக்கி மானத்தோடு வாழும் ஒழுக்கநெறி, 3. மேலும் மேலும் பல பொருளுக்கு ஆசைப்படாமல் இருக்கும் எண்ணம் இவை மூன்றும் நல்வினையைக் கட்டித்தரும் கயிறு.

**பொருநராற்றுப்படை –** முடத்தாமக்கண்ணியார்

பெருமைபொருந்திய செல்வத்தையும் பெரிய புகழையும் வலிமையுமுடைய முயற்சியை உடையவர்களும் வெற்றி முரசு முழங்கும் சேனைகளை உடையவர்களுமாகிய சேர, சோழ, பாண்டியர் மூவரும் ஒருங்கு கூடி, அரசவையில் வீற்றிருக்கும் போது அவர்களுடைய படையானது முரசை முழக்கும் போது எழுச்சி மிக்க இசை எழும்புவது போல தம் எழாஅல் முரசை முழக்கி யாழையும் மீட்டும் பொருநர் கூட்டத்தின் தலைவனை மனதில் நினைத்து எங்கே போவது என்று

தெரியாமல் வழிபெயர்ந்து திரிந்து நீங்காமல் நான் வரும் வழியின் எதிரில் பட்டாயே; இது நீர் செய்த தவத்தின் பயன்தான். நான் சொல்வதைக் கவனமாகக் கேட்பாயாக, புகழில் மேம்பட்டவனே?

## பட்டிமன்றம்

'இன்று இளைஞர்களிடம் சமூக அக்கறை பெருகி வருகிறதா/ குறைந்து வருகிறதா!' என்ற தலைப்பில் பேசப் பட்டிமன்ற உரை தயாரியுங்கள்.

### பெருகி வருகிறது

அனைவருக்கும் எங்கள் பட்டிமன்ற குழுவினர் சார்பாக வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடுவர் அவர்களே!

இன்றைய இளைஞர்களிடம் சமூக அக்கறை பெருகி வருகிறது. ஒரே ஒரு சம்பவத்தை நான் நினைவு கூர்கிறேன். 2018–ஆம் ஆண்டு கேரள மாநிலத்தில் விடாமல் பெய்த கனமழையால் அதிகமான சேதங்கள் ஏற்பட்டன. தங்களது உடைமைகளையெல்லாம் இழந்த மக்கள் நிவாரண முகாம்களில் தஞ்சமடைந்தனர். அப்போது அவர்களின் தேவைகளைத் தனித்தனியாக அறிந்து கொண்டு உடனடியாகக் களத்தில் இறங்கி உதவிகளைச் செய்தவர்கள் யார்? இளைஞர்கள்தானே! தன்னலமற்ற சேவை மனப்பான்மை உள்ளவர்கள் இளைஞர்கள்தான். இவ்வளவு ஏன்? தண்ணீரில் தத்தளித்த உயிர்களையெல்லாம் தன்னுயிரைப் பணயம் வைத்துக் காப்பாற்றியதை நாம் ஊடகங்கள் வழி பார்க்கவில்லையா? அதுமட்டுமல்ல தானம் செய்வதில் குறிப்பாக இரத்ததானம் செய்வதில் முன்னணியில் இருப்பவர்களும் இளைஞர்கள்தான் என்பதை நாம் மறுக்க முடியாது. மருத்துவமனைகளிலும் சாலையோரங்களிலும் உணவின்றித் தவிப்பவர்களுக்கு உணவு வழங்குவதும் இளைஞர்கள்தானே. பிறருக்கு உதவி செய்வதால் பின்னர் பிரச்சினை ஏதாவது வரும் என்றுகூட யோசிக்காமல் உடனடியாக உதவி செய்ய முன்வருபவர்கள் இளைஞர்கள் என்பதை நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். ஆகையால், இன்றையச் சூழலில் சமூக அக்கறையை வெளிப்படுத்துவது இளைஞர்களே என்று கூறிக்கொண்டு, நல்ல தீர்ப்பை நடுவர் வழங்குவார் என்ற எதிர்பார்ப்புடன் அமர்கிறேன் நன்றி! வணக்கம்.

### இளைஞர்களிடம் சமூக அக்கறை குறைந்து வருகிறது.

நடுவர் அவர்களே! இன்றைய இளைஞர்களுக்குச் சமூக ஊடகங்கள்தான் எல்லாமே. நாள் முழுவதும் அதிலேயே விழுந்து கிடக்கின்றனர். சுய முன்னேற்றத்திற்கான வழிகளைக் கூட அதன் மூலமே அடைகின்றனர். சொந்தக் குடும்பத்தினரிடம் கூட ஒருவருக்கொருவர் அன்பை வெளிப்படுத்த நேரமில்லை. பிறகு எப்படி சமூகத்தின் மேல் அக்கறைவரும்?.

அடுத்தபடியாக இளைஞர்களைத் தன் காலின் கீழ் வைத்திருப்பது போதைப் பொருட்கள்தான். போதைக்கு அடிமையாக வாழும் இளைஞர்களுக்கு எங்கிருந்து

வரும் சமூக அக்கறை? பயணங்களில் கூட ஒருவருக்கொருவர் முகங்களைப் பார்ப்பது கிடையாது. கைபேசியில் நேரத்தை வீணடிக்கும் இளைஞர்கள்தான் இன்று அதிகமாக இருக்கின்றனர்? அதுமட்டுமா! இன்றைக்கு இளைஞர்கள் பொது இடங்களில் செய்யும் தகவறுகளைத் தினமும் பார்த்துக்கொண்டுதானே இருக்கின்றோம்!. பொது இடங்களுக்குக் குடும்பத்தோடு செல்ல முடிகிறதா? இப்படி எந்த ஒரு இலட்சியமுமின்றி வாழ்வதால் ஊடகங்கள் வழி பல நூதன தவறுகள் பெருகி வருகின்றன. அதற்கெல்லாம் முக்கிய காரணமாக இருப்பவர்கள் இளைஞர்கள்தான். ஆகவே, இன்றையச் சூழலில் சமூக அக்கறை இளைஞர்களிடம் குறைந்து வருகிறது என்று ஆணித்தரமாகக் கூறிக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

## உறுதிமொழி

இவ்வுலகின் அனைத்து உயிர்களுமே நேசத்தால் பிணைக்கப்பட்டுள்ளன என்பதை நான் அறிவேன். என் வாழ்வில் நான் அனைத்து உயிர்களிடமும் அன்புடன் நடந்துகொள்வேன். வறியவர்களின் தேவையை அறிந்து உதவி செய்வேன். என்னுடன் பயிலும் மாணவர்களின் கல்விக்காக என்னால் இயன்ற உதவிகளைச் செய்வேன். பசியால் வாடுவோருக்கு உணவு கொடுப்பேன். பிறர் கேட்கும் சிறுசிறு உதவிகளை நான் செய்வேன். மேலும், இரத்ததானம், உடல் உறுப்புத் தானம் போன்ற அறப்பணிகளில் நான் ஈடுபடுவேன். நான் மட்டுமல்லாமல் என் வீட்டாரையும் மனிதநேயச் செயல்களில் ஈடுபடச் செய்வேன் என உறுதி கூறுகிறேன். இது உறுதி... உறுதி...உறுதி.

## மனிதநேயக் குறும்படங்கள்

https://youtu.be/tt 2n xx02 KzE?si=SAL zEES20Gk4IGYD

https://youtu.be/ Xy=7R6lt7MU? Si=sKwNTGPS0la1A61y

## சங்க இலக்கியங்கள்

### எட்டுத்தொகை நூற்கள்

| நூற்கள் | தொகுத்தவர் | தொகுப்பித்தவர் |
|---|---|---|
| நற்றிணை | தொகுத்தவர் இல்லை | பன்னாடு தந்த பாண்டியன் மாறன் இளம்வழுதி |
| குறுந்தொகை | பூரிக்கோ | பெயர் தெரியவில்லை |
| ஐங்குறுநூறு | புலத்துறை முற்றிய கூடலூர்கிழார் | யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை |
| கலித்தொகை | நல்லந்துவனார் | பெயர் தெரியவில்லை |
| அகநானூறு | உருத்திரசன்மன் | உக்கிரப்பெருவழுதி |

| | | |
|---|---|---|
| பதிற்றுப்பத்து | பெயர் தெரியவில்லை | பெயர் தெரியவில்லை |
| புறநானூறு | பெயர் தெரியவில்லை | பெயர் தெரியவில்லை |
| பரிபாடல் | பெயர் தெரியவில்லை | பெயர் தெரியவில்லை |

**பத்துப்பாட்டு**

| | | |
|---|---|---|
| திருமுருகாற்றுப்படை | – | நக்கீரர் |
| பொருநராற்றுப்படை | – | முடத்தாமக்கண்ணியார் |
| சிறுபாணாற்றுப்படை | – | நல்லூர் நத்தத்தனார் |
| பெரும்பாணாற்றுப்படை | – | கடியலூர் உருத்திரங்கண்ணனார் |
| மலைபடுகடாம் | – | இரணிய முட்டத்துப் பெருங்கௌசிகனார் |
| மதுரைக்காஞ்சி | – | மாங்குடி மருதனார் |
| குறிஞ்சிப்பாட்டு | – | கபிலர் |
| பட்டினப்பாலை | – | கடியலூர் உருத்திரங்கண்ணனார் |
| முல்லைப்பாட்டு | – | நப்பூதனார் |
| நெடுநல்வாடை | – | நக்கீரர் |

## பதினெண்கீழ்க் கணக்கு நூற்கள்

1. நாலடியார்
2. நான்மணிக்கடிகை
3. இன்னா நாற்பது
4. இனியவை நாற்பது
5. கார் நாற்பது
6. களவழி நாற்பது (புறத்திணை நூல்)
7. ஐந்திணை ஐம்பது
8. ஐந்திணை எழுபது
9. திணைமொழி ஐம்பது
10. திணைமாலை நூற்றைம்பது
11. திருக்குறள் (முப்பால்)

12. திரிகடுகம்
13. ஆசாரக்கோவை
14. பழமொழி நானூறு
15. சிறுபஞ்சமூலம்
16. கைந்நிலை (ஒழுக்கம்)
17. முதுமொழிக்காஞ்சி
18. ஏலாதி

## பன்னிரு திருமுறைகளின் பட்டியல்

தேவாரம் (முதல் ஏழு திருமுறைகள்)

திருவாசகம்

திருக்கோவையார் (எட்டாம் திருமுறை)

திருவிசைப்பா

திருப்பல்லாண்டு (ஒன்பதாம் திருமுறை)

திருமந்திரம் (பத்தாம் திருமுறை)

சிவபெருமான் திருவந்தாதி (பதினோராம் திருமுறை)

பெரியபுராணம் (பன்னிரண்டாம் திருமுறை)

## ஐம்பெருங்காப்பியங்கள்

| | | |
|---|---|---|
| சிலப்பதிகாரம் | – | இளங்கோவடிகள் |
| மணிமேகலை | – | சீத்தலைச்சாத்தனார் |
| சீவகசிந்தாமணி | – | திருத்தக்கத்தேவர் |
| வளையாபதி | – | ஆசிரியர் பெயர் தெரியவில்லை |
| குண்டலகேசி | – | நாதகுத்தனார் |

## ஐஞ்சிறு காப்பியங்கள்

| | | |
|---|---|---|
| உதயணகுமார காவியம் | – | ஆசிரியர் பெயர் தெரியவில்லை |
| நாககுமார காவியம் | – | ஆசிரியர் பெயர் தெரியவில்லை |

| | | |
|---|---|---|
| யசோதர காவியம் | – | வெண்நாவலூர் உடையார் வேள் |
| சூளாமணி | – | தோலாமொழித்தேவர் |
| நீலகேசி | – | ஆசிரியர் பெயர் தெரியவில்லை |

## அலகு மதிப்பீடு


1. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுங்கள்.

   'ராஜா வந்திருக்கிறார்' என்ற சிறுகதையின் ஆசிரியர்.

   அ. கு.அழகிரிசாமி ஆ. எஸ்.இராமகிருஷ்ணன்

   இ. வின்சென்ட் சின்னத்துரை ஈ. முனைவர் இளசை சுந்தரம்

2. கீழ்வரும் சொற்சூரியனைப் பூர்த்தி செய்யுங்கள்.




3. சத்ய ஞான சபையின் சிறப்புகளைக் குறிப்பாக எழுதுங்கள்.

4. சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று (டிசம்பர் 3) பள்ளியில் நடைபெறும் விழாவில் உரையாற்ற 'சாதிப்பதற்கு ஊனம் ஒருதடையல்ல' எனும் தலைப்பில் சொற்பொழிவு தயார் செய்யுங்கள்.

5. பள்ளி இலக்கிய இதழில் வெளியிட 'மனிதநேயமே மகத்தானப் பண்பு' எனும் தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.